## விதி முறைகளும், பிரமானங்களும்

1961- ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க ஆயுள்வேதச் சட்டத்தின் 55(1)(அ), (உ), 55(2) பிரிவின் கீழ் பொது (சர்வாங்க) மற்றும் விசேட ஆயுர்வேத வைத்தியர்களாகப் பதிவு செய்தல்.

# ஆயுர்வேத வைத்திய சபை

விதிமுறைகளும் பிரமானங்களும்

பகுதி -1

1. பொது (சர்வாங்க) வைத்தியர்களாகப் பதிவு செய்தல்

கீழே காணப்படும் தராதரங்களையுடைய விண்ணப்தாரர்கள், சட்டத்தின் 55(1) (அ), (உ) பிரிவின் கீழ் பொது (சர்வாங்க) வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்கு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

1.1. வயது 23 வருடத்தினைப் பூர்த்தியடைந்த பின்னர் ஆக குறைந்தது 10 வருடங்களாகப் பொது (சர்வாங்க) வைத்தியத் தொழிலை புரிபவராயுள்ள 45 வயதினை பூர்த்தி அடைந்தவராகவும் அல்லது,

1.2. வயது 23 வருடத்தினைப் பூர்த்தியடைந்த பின்னர் ஆகக் குறைந்தது 05 வருடங்களாகப் பொது (சர்வாங்க) வைத்தியத் தொழிலை புரிபவராயுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

i. மேற் கூறப்பட்ட 1.1 பந்தியின் காணப்பட்ட தராதரங்களையுடைய விண்ணப்பக்காரர்கள் பதிவு செய்வதற்கு முன்னர் ஆயுர்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

ii. மேற் கூறப்பட்ட 1.2 பந்தியில் காணப்பட்ட தராதரங்களையுடைய விண்ணப்பதாரர்கள் பதிவு செய்யப்படுவதற்கு முன்னர் ஆயுள்வேத சபையினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீசையிலும், வாய்மொழிப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

2. **விசேட வைத்தியர்களாகப் பதிவு செய்தல்**

கீழே காணப்படும் தராதரங்களையுடைய விண்ணப்தாரர்கள், சட்டத்தின் 55(2) பிரிவின் கீழ் விசேட வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்கு கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

2.1 வயது 21 வருடத்தினைப் பூர்த்தியடைந்த பின்னர் ஆக குறைந்தது ஏழு வருடங்களாகப் குறிப்பிடப்படும் விசேட வைத்தியத் தொழிலை புரிபவராயுள்ள 45 வயதினை பூர்த்தி அடைந்தவராகவும் அல்லது,

2.2 வயது 21 வருடத்தினைப் பூர்த்தியடைந்த பின்னர் ஆகக் குறைந்தது நான்கு வருடங்களாகப் விசேட வைத்தியத் தொழிலை புரிபவராயுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:

i. கீழே காணப்படும் விசேட அம்சங்களிற்காக ஆயுள்வேத வைத்தியர்களைப் ஆயுள்வேத வைத்திய சபையின் விசேட பதிவேட்டினில் பதிவு செய்யப்படும்.

(அ) பாம்புக்கடி வைத்தியம் (ஆ) விசர் நாய்க்கடி

(இ) முறிவு தறிவு வைத்தியம் (ஈ) கட்டிபுண் வைத்தியம்

(உ) சுடு புண் வைத்தியம்

(ஊ) வர்மம் முறை வைத்தியம் (எ) கண் வைத்தியம்

(ஏ) மனநோய் வைத்தியம் (ஒ) சர்மரோக வைத்தியம்

ii. மேற் கூறப்பட்ட 2.1 பந்தியின் காணப்பட்ட தராதரங்களையுடைய விண்ணப்பக்காரர்கள் பதிவு செய்வதற்கு முன்னர் ஆயுர்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சையில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

iii. மேற் கூறப்பட்ட 2.2 பந்தியில் காணப்பட்ட தராதரங்களையுடைய விண்ணப்பதாரர்கள் பதிவு

3. **பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல்**

3.1 சட்டத்தின் 55(1) (அ), (உ) பிரிவின் கீழ் பொது (சர்வாங்க) வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்குத் தேவையான தராதரங்களையுடைய விண்ணப்பக்காரர்களும், ஆயுர்வேத வைத்திய சபையினால் விநியோகிக்கப்படும் "வைத்திய சபை 1" இலக்கமுடைய அச்சிடப்பட்ட படிவத்தினைப் பூர்த்தி செய்து ஆயுள்வேத வைத்திய சபையின் பதிவாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

# 4. தேவையான தராதரங்கள் உண்டு என நிரூபித்தல்

4.1 சகல விண்ணப்பத்துடனும் பதிவுக் காரியஸ்தர் காரியாலய்தில் அல்லது மாவட்ட பதிவுக் காரியாலயத்தில் பெறப்பட்ட பிறப்புச் சான்றிதழினை அனுப்புதல் வேண்டும்.

4.2 தேசிய அடையாள அட்டையின் பிரதியினை சமாதான நீதவான் உறுதி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 சான்றிதழ்களின் மூலப் பிரதிகளையும் விண்ணபத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

## 5. வாய்மொழிப் பரீட்சை

### 5.1 பொது சர்வாங்க வைத்தியர்காளப் பதிவு செய்தல்

மேற் கூறிய 1.1 பிரிவின் கீழ் காணபபட்ட தராதரங்களை உடையவரென்று ஏற்றுக்கொண்ட சாட்சியங்களைப் சமர்ப்பிக்கும் விண்ணபக்காரர்கள் ஆயுள்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப் பரீட்சையில் ஆயுள்வேத மூலதர்மம், திரவிய குண விஞ்ஞானம், ரோக விஞ்ஞானம், சிகிச்சா விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் பற்றிய அவருக்கு போதிய அறிவு உண்டென்பதைக் காண்பதற்கு பரீட்சிக்கப்படும்.

### 5.2 விசேட வைத்தியர்களாகப் பதிவு செய்தல்

மேற் கூறிய 2.1 பிரிவின் கீழ் காணபபட்ட தராதரங்களை உடையவரென்று ஏற்றுக்கொண்ட சாட்சியங்களைப் சமர்ப்பிக்கும் விண்ணபக்காரர்கள் ஆயுள்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப் பரீட்சையில் ஆயுள்வேத மூலதர்மம் பற்றிய சாதாரண அறிவினையும், அவர் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் விசேட அம்சத்தில் சம்பந்தமான திரவிய குண விஞ்ஞானம், ரோக விஞ்ஞானம், சிகிச்சா விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் பற்றிய அவருக்கு போதிய அறிவு உண்டென்பதைக் காண்பதற்கு பரீட்சிக்கப்படும்.



## 6. எழுத்துப் பரீட்சையும், வாய்மொழிப் பரீட்சையும்

### 6.1 பொது (சர்வாங்க) வைத்தியர்களாகப் பதிவா செய்தல்

(அ) மேற் கூறிய 1.2, 1:4 பிரிவின் கீழ் காணபபட்ட தராதரங்களை உடையவரென்று ஏற்றுக்கொண்ட சாட்சியங்களைப் சமர்ப்பிக்கும் விண்ணபக்காரர்கள் ஆயுள்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப் பரீட்சையில் ஆயுள்வேத மூலதர்மம், திரவிய குண விஞ்ஞானம், ரோக விஞ்ஞானம், சிகிச்சா விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் பற்றிய அவருக்கு போதிய அறிவு உண்டென்பதைக் காண்பதற்கு பரீட்சிக்கப்படும்.

(ஆ) இவ் எழுத்துப் பரீட்சைக்கு மேற் கூறிய ஒவ்வொரு வினாத்தாள் நான்கிலும் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

(இ). பொது விண்ணப்பதாரர்களுடைய வினாத்தாள் நான்கிலும் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் மட்டும் சித்தியடையும் விண்ணப்பதாரர்களுக்கு மிகுதிப் பாடத்தினை பின்பு பூர்த்தி செய்வதற்கு அனுமதியளிக்கப்படும்.

(ஈ). மேற் கூறிய எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சியடையும் விண்ணப்பதாரர்கள் ஆயுள்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழிப் பர்ட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சையில் மேற் கூறிய விடயங்கள் பற்றி அவருக்கு போதிய அறிவு உண்டென்பதைக் காண்பதற்கு மேலும் வாய் மொழிப் பரீட்சையில் பரீட்சிக்கப்படும்.

### 6:2 விசேட வைத்தியர்களாகப் பதிவு செய்தல்

(அ) மேற்கூறிய 2:2 பிரிவின் கீழ் காட்டப்பட்ட தராதரங்களை உடையவரென்பதை ஏற்றுக்கொள்ளும் சாட்சியங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணபக்காரர்கள் ஆயுர்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றிற்கு முதலில் அழைக்கப்படுவார் . இப்பரீட்சையில் ஆயுர்வேத மூலதர்மம், குறிப்பிடப்படும் விசேட வைத்திய அம்சம் சம்பந்தமான திரவிய குண விஞ்ஞானம், ரோக விஞ்ஞானம் , சிகிச்சா விஞ்ஞானம், பற்றிய

அவருக்குப் போதிய அறிவு உண்டென்பதனைக் காண்பதற்கு பரீட்சிக்கப்படும் .

(ஆ) இப்பரீட்சை (I) ஆயுர்வேத மூலதர்மம் (2) குறிப்பிடப்படும் விசேட அம்சம் ஆகியவற்றின் வினாத்தாள் இரண்டிலும் தேர்ச்சியடைதல் வேண்டும். விண்ணப்பக்காரர்கள் வினாத்தாள் இரண்டிலும் ஒரே தடவையில் சித்தியடைதல் வேண்டும்.

(இ) மேற் கூறிய எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சியடையும் விண்ணப்பகாரர்கள் ஆயுர்வேத வைத்திய சபையினால் நடாத்தப்படும் வாய்மொழி பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சையில் ஆயுர்வேதம் மூலதர்மம், தாம் பதிவு செய்ய எதிர்பார்க்கும் விசேட அம்சம் சம்பந்தமான திரவிய குண விஞ்ஞானம், ரோக விஞ்ஞானம், சிகிச்சா விஞ்ஞானம் பற்றி அவருக்கு போதிய அறிவு உண்டென்பதனை காண்பதற்கு மேலும் வாய்மொழி பரீட்சையில் பரீட்சக்கப்படும்.

## 7. பரீட்சை நடைபெறுதல்

7.I தேவையான தராதரங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளும் சாட்சியங்களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பக்காரர்கள் மேற் கூறிய வாய்மொழிப் பரீட்சைக்கும் , எழுத்துப் பரீட்சையும் வாய் மொழி பரீட்சைக்குமான உரிய கட்டணத்தை செலுத்துவதற்கும் , அப்பரீட்சை நடைபெறும் திகதி, நேரம் மற்றும் இடத்தினையும் ஆயுர்வேத வைத்திய சபையினால் கால கிரமத்தில் அறிவிக்கப்படும்.

7.2 தேவையான தராதரங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ளும் சாட்சியங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரர்களினது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## **8.** பரீட்சைக்குத் தோற்றும் எண்ணிக்கை

8:I தேவையான தராதரங்களையுடைய விண்ணப்பக்காரர்கள் குறிக்கப்பட்ட எழுத்துப் பரீட்சைக்கு மூன்று தடவைக்கு மேற்படாது தோற்றலாம். எனினும், விசேட காரணங்களில் மட்டும் மேலும் ஒரு தடவை தோற்றுவதற்கு அனுமதி தருவதற்கு ஆயுர்வேத வைத்திய சபைக்கு முடியும்.

8.2 தேவையான தராதரங்களையுடைய விண்ணப்பகாரர்கள் குறிக்கப்பட்ட வாய்மொழி பரீட்சைக்கு மூன்று தடவைக்கு மேற்படாது தோற்றலாம். எனினும் விசேட காரணங்களில் மட்டும் மேலும் ஒரு தடவை தோற்றுவதற்கு அனுமதி தருவதற்கு ஆயுர்வேத வைத்திய சபைக்கு முடியும்.

## 9. கட்டணம்

9.1 விண்ணப்பப்படிவக் கட்டணம்

பதிவினை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்படிவத்துடன் ரூ.1750/- கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.

### 9.2. பரீட்சைக் கட்டணம்

எழுத்துப் பரீட்சைக்கும், வாய்மொழிப் பரீட்சைக்கும் விண்ணப்பக்காரர்களினால் கீழே காட்டப்படும் கட்டணத்தைச் செலுத்தல் வேண்டும்.

பொது (சர்வாங்க) வைத்தியர்களுக்காக நடைபெறும் பரீட்சை

எழுத்துப் பரீட்சைக் கட்டணம் வாய்மொழிப் பரீட்சைக் கட்டணம்

| | எழுத்துப் பரீட்சை | வாய்மொழிப் பரீட்சை |
|---|---|---|
| முதலாம் தடவை | 3000/- | 2500/- |
| இரண்டாம் தடவை | 3000/- | 2500/- |
| மூன்றாம் தடவை | 3000/- | 2500/- |

விசேட வைத்தியர்களுக்காக நடைபெறும் பரீட்சை

| | எழுத்துப் பரீட்சை | வாய்மொழிப் பரீட்சை |
|---|---|---|
| முதலாம் தடவை | 3000/- | 3000/- |
| இரண்டாம் தடவை | 3000/- | 3000/- |
| மூன்றாம் தடவை | 3000/- | 3000/- |

குறிப்பு :

பதிவு செய்வதற்கான விண்ணபத்துடன் பரீட்சைக் கட்டணத்தை அனுப்புதல் கூடாது. தேவையான தராதரம் உடைய விண்ணபகாரர்களுக்கு அக்கட்டணத்தைச் செலுத்தும் படி பின்னர் அறிவித்தல் அனுப்படும்

10. பதிவு செய்யும் கட்டணம்

10.1 சட்டத்தின் (55(1)(உ) பிரிவின் கீழ் பொது (சர்வாங்க) வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்காக ரூபா 7500/= கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

10.2 சட்டத்தின் (55) (2) பிரிவின் கீழ் விசேட வைத்தியர்களாகப் பதிவு செய்வதற்காக ருபா 5000/= கட்டணமாகச் செலுத்தல் வேண்டும்.

குறிப்பு:- பதிவுக் கட்டணத்தினை விண்ணபத்துடன் அனுப்புதல் கூடாது. குறிப்பிட்ட பரீட்சையில் தேர்ச்சியடைந்த விண்ணபகாரர்களுக்குப் பதிவுக்கட்டணம் செலுத்தும்படி பின்னர் அறிவித்தல் அனுப்படும்.

சித்த அம்சம்

சித்த மூலதனம்

முத்தாதுகள், முத்தோஷங்கள், மும்மலங்கள், சப்தாதுக்களும் அவற்றின் மலங்களும் ஆகியவற்றின் பண்புகள், தொழில் முதலியன முத்தாதுகள், முத்தோவும் அடைவதற்கான காரணங்களும் வாத பித்த கபங்கள், கூடிக் குறைவதாலான குணங்குறிகள், ஆமத்தைப் பற்றி விளக்கம் இருதயம், சுவாசாசயம் கல்லீரல், மண்ணிரல் விருக்கம் (சிறு நீரகம்) ஆமாசயம், கிரகணி, பக்குவாசயம் ஆகிய உள் உறுப்புக்களின்



இருப்பிடமும், பிரதான தொழில்களும் நாடி நரம்புகளின் விபரம், நோய் தடுப்பு முறைகளை பற்றிய சித்தமருத்துவ விதிகள், உணவு, நீர், காற்று ஆகிய இவற்றின் முக்கியத்துவம். தினசரியையும் சுகாதாரமும், முக்குணங்கள் பஞ்ச பூதங்கள், ஞான இந்திரியங்களும், தரும இந்திரியங்களும் ஆகியவற்றை பற்றிய விளக்கங்களும் அவசியம்.

பாடப்புத்தகங்கள்:-

1. பதிணெண்சித்தர் பதார்த்த குண சிந்தாமணி. 2. சித்த மருத்துவாங்கச் சுருக்கம். (சென்னை அரசினர் வெளியீடு) 3. அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் 360. 5. அஷ்டாங்க இருதயம் அத்தியாயம் 1-5 வரை

## 2. திரவிய பதார்த்த குணம்

திரவியம் அல்லது பதார்த்தம் என்பதன் விளக்கம்

திரவியங்களின் தொகுப்பு:- தாவர , தாது, ஜீவ வர்த்தங்கள், திரவியங்களின் சுவை, பண்பு பிரிவு, விரியம்,பிரபாவம், என்பவற்றை பற்றிய விபரம். திரவியங்களை பேதப்படுத்தி அறிந்து கொள்ளல், சுத்திக்கிரமம். மாத்திரை அல்லது அளவை முறைகள் அவுடத செய்முறைகள் பற்றிய பொது விபரம். அபின், கஞ்சா, நேர்வாளம், எட்டி நாவி, இரசம், கெந்தகம், பாடணம், துரிசு ஆகியவற்றின் விஷக்குறிகளை பற்றிய விபரங்கள் அவசிம் . மேலும் திரிபலை திரிகடுகு, தசமுலம், கத்தரி கண்டங்கத்தரி, துதுவளை ஆடாதோடை கற்புரவள்ளி, தேவதாரு, கொத்தமல்லி, பற்பாடகம், வசம்பு, பெரும்குரும்பை , கடுகு, கடுகு ரோகணிபுலான்கிழங்கு, கோரைக்கிழங்கு, சிறகாஞ்சோன்றி, சீந்தில் , சிற்றாமட்டி, பேராமட்டி, சிற்றரத்தை, சிற்றாமணக்கு வாதமடக்கி, மாவிலங்கம், வில்வம், இருவேரி, கோட்டம், வெட்பாலரிசி, வாய்விடங்கம், இலாமச்சம், நன்னாரி, தண்ணீர், விட்டான் கிழங்கு, கீழ்காய்நெல்லி, சீதேவியார்செங்கழுநீர், செஞ்சந்தனம், வெண்சந்தனம், முருங்கை, வேம்பு, வேல், இருசீரகம், சிற்றேலம், கறுவா, கராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி, தாழிசபத்திரி, சித்திரமுலம், துளசி, புரோசாணி, ஓமம் நெருஞ்சில், நீர் முழ்ழி, நொச்சி, நிலவேம்பு, விஷ்ணுகிராத்தி, எட்டி, ஆசோகுலோத்திரம், சரக்கொன்றை, சடாமஞ்சில், உள்ளி, பெருங்காயம், சாறணை,

பொன்னாங்காணி, வல்லாரை, வெற்றிலை, அதிமதுரம் பேய்ப்புடல், அமுக்கறா, உழுந்து, கொள்ளு, தாமரைவளையம், தேன், மோர், பால்வகை, இந்துப்பு இரசம் பாஷாணங்கள் பிரதான தாது ஜீவ திரவியங்களின் விபரங்களும் பிரயோகிப்பும் அளவும் தெரிந்திருப்பதும் அவசியம்.

பாடப்புத்தகங்கள்:-

1. குணபாடம் 1,2,3 உம் பாகங்கள் (சென்னை அரசினர் வெளியீடு)
2. இருபாலைச் செட்டியார் பதார்த்த சூடாமணி
3. பதார்த்த குண சிந்தாமணி
4. பதார்த்த குண விளக்கம் மூலிகைவர்க்கம் கண்ணுச்சாமி
5. அகத்தியர் பஞ்ச காவிய நிகண்டு -800
6. போகர் நிகண்டு – 1200
7. பரராசசேகரம் – 12000
8. அகத்தியர் வைத்திய காவியம் - 1500
9. அஸ்டாங்க விருதயம் 1,9,10 அத்தியாயங்கள்

## 03. ரோக விஞ்ஞானம்

ரோகத்தின் வரைவிலக்கணம் பேதங்கள் காரணங்கள் பூர்வ ருபம். ருபம், உபசயம் சம்பிராத்தி ஆகியவற்றை பற்றிய பொது விளக்கம் உபத்திரவம் சாத்தியா சாத்தியம் என்பனவற்றின் விபரம் எண்வகை தேர்வு முறைகள் பற்றிய விளக்கம் தொற்று வியாதிகள் பற்றிய விளக்கம் மேலும் சுரம், சன்னி, ஆசிரனம் அதிசாரமும் அதன் பேதங்களும் இழை, கசம் கரகணி ரோகம் பாண்டு முலம் சந்திவாதம் பிரமேகம், கல்லடைப்பு, காமாலை, இரத்தபித்தம், சலோதரம், இருதய ரோகம் யானைக்கால் உன்மாதம் அபஷ்மாரம் சர்ம வியாதி, பாரிசவாதம், கிருமி ரோகம் கர்ப்பிணி ரோகம், பிரசவ கோளாறுகள் பற்றிய விபரங்கள், வெள்ளை படுதல் பெரும்பாடு ஆகியவற்றின் காரணங்கள் முற்குறி பிரதான குணங்குறிகள், உபத்திரவங்கள் முதலியன தெரிந்திருப்பது அவசியம்.



பாடப்புத்தகங்கள்:-

1. பாராசசேகரம் – 12000
2. பதிணெண்சித்தர் நாடி நூல்
3. செகராசசேகரம்
4. யூகி சிந்தாமணி
5. சித்த மருத்துவம் ( சென்னை அரசினர் வெளியீடு)
6. தேரையர் நீர்குறி, நெய்குறி சாஸ்திரம்
7. வைத்திய சார சங்கிரமம்
8. இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம்

## 04. சிகிச்சை

வியாதிகளுக்கான பொது சிகிச்சைக் கிரமங்கள் , விசேட சிகிச்சை கிரமங்கள் , பஞ்ச கரும சிகிச்சை இலக்கணம் , பிரும்மணம், உபத்திரவங்களுக்கான சிகிச்சை பொதுவாக உபயோகிக்கப்படும். குடி நீர், குளிசை, சூரணம், இரச அவுடதமும் அவற்றை பற்றிய அறிவும் அவற்றின் அளவு, அனுபாணம் முதலியன பத்தியா பற்றிய விபரங்கள்.

பாடப்புத்தகங்கள்

1. பாராசசேகரம் 12,000
2. செகராசசேகரம்
3. சித்த மருத்துவம் ( சென்னை அரசினர் வெளியீடு)
4. வைத்திய சார சங்கிரகம் ( மதுரை தமிழ் சங்க வெளியீடு)
5. இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம்
6. இருபாலைச் செட்டியார் வைத்திய தெளிவு
7. சரபேத்திர வைத்திய முறைகள்
8. புலிப்பானி வைத்தியம், 500
9. அகத்தியர் பரிபூரணம் 1,200
10. அகத்தியர் வைத்திய காவியம் 1,500